உங்க கனவ சொல்லுங்க- சமூக ஊடக போட்டிகள்

சென்னை, ஜன.25: உங்க கனவ சொல்லுங்க - சமூக ஊடக போட்டிகள் நடத்தப்படுகிறது. இதுகுறித்து செய்தி மக்கள் தொடர்பு துறை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

முதல்வர் மு.க.ஸ்டாலின், 'உங்க கனவ சொல்லுங்க' என்ற முன்னெடுப்பை 9.1.2026 அன்று தொடங்கி வைத்தார். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் 'உங்க கனவ சொல்லுங்க' என்ற தலைப்பில் ஊடக விழிப்புணர்வு போட்டிகளை நடத்தவுள்ளது. இதன் வாயிலாக இளைஞர்களும் பொதுமக்களும் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள உதவுகிறது.மக்கள் தேவைகளை உணர்ந்து செயல்படும் தமிழ்நாடு அரசு, மக்களின் கனவுகள் மற்றும் எதிர்பார்ப்புகளை நேரடியாக அறிந்து கொள்ளும் நோக்கில் 'உங்க கனவ சொல்லுங்க' என்ற முன்னெடுப்பை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.91 கோடி கிராமப்புற மற்றும் நகர்ப்புற குடும்பங்களை, தன்னார்வக் குழுக்கள் நேரில் சென்று சந்தித்து, அவர்களின் கருத்துகள் மற்றும் 2030ம் ஆண்டை நோக்கிய கனவுகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கான களப்பணிகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது, இதற்காக பயிற்சி பெற்ற சுமார் 50,000 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்படும் தகவல்கள் பிரத்யேக செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, மக்களுக்கு 'கனவு அட்டை' வழங்கப்படும். அதன் வாயிலாக www.uks.tn.gov.in இணையதளத்தில் பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளின் நிலையை அறிந்து கொள்ளலாம். இந்த முயற்சியை மக்களிடம் கொண்டு செல்லும் வகையில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் ஊடக மையம் சமூக ஊடக விழிப்புணர்வு போட்டிகளை நடத்தவுள்ளது. படைப்பு மற்றும் இதர விவரங்களை 9.2.2026க்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

எங்க பிள்ளைக கல்யாணத்த எப்ப நடத்தனும்னு எங்களுக்கு தெரியும்

சென்னை, ஜன. 25: கூட்டணி குறித்து முடிவு செய்து அறிவிக்க இன்னும் கால அவகாசம் உள்ளது என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா கூறினார்.

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா நேற்று முன்தினம் நள்ளிரவு 11.50 மணிக்கு மும்பையில் இருந்து ஏர் இந்தியா பயணிகள் விமானத்தில் சென்னைக்கு வந்து விட்டு, நேற்று காலை 9.30 மணிக்கு இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் சென்னையில் இருந்து தூத்துக்குடி புறப்பட்டு சென்றார். அப்போது விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி:

பிரதமர் மோடி அவர்களுடைய கட்சிப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக சென்னைக்கு வந்தார், சென்றுள்ளார். இதில் நான் கருத்து சொல்வதற்கு எதுவும் இல்லை. தேர்தல் கூட்டணி குறித்து இப்போது உடனடியாக எதுவும் சொல்ல முடியாது. பொறுத்திருங்கள். கட்சியில் எங்கள் நிர்வாகிகள் அனைவரிடமும் கருத்துகளை கேட்டு, உரிய நேரத்தில் கூட்டணி குறித்து அறிவிப்போம்.

நான் ஏற்கனவே மூன்று கட்டங்கள் சுற்றுப்பயணம் செய்து உள்ளேன். இப்போது நான்காம் கட்ட சுற்றுப்பயணம் தூத்துக்குடியில் இருந்து தொடங்கி வருகிற பிப்ரவரி 3ம் தேதி வரையில், சுற்றுப்பயணம் மேற்கொள்கிறேன். கன்னியாகுமரியில் இருந்து விருதுநகர் வரை, நான்காம் கட்ட பிரசார பயணம் இருக்கும்.

எங்கள் கட்சி கூட்டணி அறிவிப்பதில் தாமதம் எதுவும் இல்லை. தேர்தல் தேதி இன்னும் அறிவிக்கவில்லை. யார் யார் எத்தனை தொகுதி, வேட்பாளர்கள் யார் என்று எந்த கட்சியும் இன்னும் அறிவிக்கவில்லை. எனவே இன்னும் கால அவகாசம் உள்ளது. பிப்ரவரி 20ம் தேதிக்கு பின்புதான் தேர்தல் தேதி அறிவிக்கப்பட இருக்கிறது.

தேமுதிக எங்கள் குழந்தைகள். எங்கள் குழந்தைகளுக்கு எப்போது கல்யாணம் செய்ய வேண்டும், எந்த இடத்தில் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் என்பது ஒரு அம்மாவாக எனக்கு தெரியும். எனக்கு கடமைகள், பொறுப்புகள் அதிகமாக உள்ளன. எனவே உரிய நேரத்தில் எல்லாருமே போற்றும்படி, ஒரு நல்ல கூட்டணியை அமைப்போம் என்பதை உறுதியாக கூறுகிறேன்.

திமுகவுடன் கூட்டணி சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடப்பதாக, நீங்களாகவே எழுதிக் கொண்டு இருக்கிறீர்கள். அதற்கெல்லாம் நான் பதில் சொல்லிக் கொண்டு இருக்க முடியாது. இது போன்ற யூகங்களுக்கெல்லாம் பதில் கூறவும் முடியாது.

என்டிஏ கூட்டணியில் இவ்வளவு கட்சிகள் தான் என்று இன்னும் பைனல் ஆகவில்லை. அதேபோல், திமுக கூட்டணியில் இன்னும் இவ்வளவு கட்சிகள் தான் என்பது முடிவாகவில்லை. எனவே எதுவுமே இன்னும் பைனல் வரவில்லை.

எனவே எந்த நேரத்தில் எது வேண்டுமானாலும் மாறலாம். யார் யாரும், எந்த கூட்டணியில் வேண்டுமென்றாலும் சேரலாம். அதே நேரத்தில் தேமுதிகவை பொறுத்தமட்டில், நிச்சயமாக தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு நல்லது நடக்கும் விதத்தில் ஆழ்ந்த சிந்தித்து, ஒரு தெளிவான முடிவை நாங்கள் எடுப்போம்.

இவ்வாறு பிரேமலதா கூறினார்.

உயர் ரக வெளிநாட்டு சரக்கோடு விமானத்தில் மிதக்கலாம்



ஏர் இந்தியா விமான நிறுவனம் அறிவிப்பு

சென்னை, ஜன. 25: சர்வதேச விமான பயணிகள் இனி மது மயக்கத்தில் விமானத்தில் பறக்கலாம். இதற்காக உயர் ரக வெளிநாட்டு சரக்கும் வழங்கப்படும் என ஏர் இந்தியா விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

சென்னை உள்ளிட்ட இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் விமானங்கள், வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் விமானங்கள் போன்றவைகளில் பயணிக்கும் சர்வதேச விமான பயணிகளுக்கு விமானங்கள் நடுவானில் பறந்து கொண்டிருக்கும் போது, விருப்பப்படும் பயணிகளுக்கு மிகக் குறைந்த அளவு மதுபானங்கள் குடிக்க கொடுப்பது வழக்கம்.

ஆனால் வெவ்வேறு நிறுவன விமானங்களில், வெவ்வேறு விதமாக, மதுபானங்கள் வழங்கப்படும். சில விமானங்களில், உயர் வகுப்பு விமான பயணிகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. வேறு சில விமானங்களில் கட்டணங்கள் வசூலித்து விட்டு, மதுபானங்கள் வழங்கப்படுகிறது. சில விமானங்களில் உயர்ரக மதுபானங்கள் வழங்காமல், சாதாரண ரக மதுபானங்கள் வழங்குவதாக பயணிகள் குறைப்பட்டு கொள்வதும் உள்ளது.

இந்நிலையில், ஏர் இந்தியா விமான நிறுவனம் தங்களுடைய விமானங்களில் சர்வதேச பயணம் மேற்கொள்ளும் பயணிகள் அனைவருக்கும் உயர் ரக, வெளிநாட்டு மதுபானங்கள் வழங்கும் திட்டத்தை புதிதாக தொடங்கியுள்ளது. அதற்காக பயணிகளிடம் கட்டணங்கள் எதுவும் வசூலிப்பது இல்லை என்றும் அவர்களுடைய டிக்கெட் கட்டணத்திலேயே, பேக்கேஜின் ஒரு பகுதியாக வழங்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

ஆனால், பயணிகளின் கேபின்களான முதல் வகுப்பு, பிசினஸ் கிளாஸ், பிரீமியம் எகனாமி, எகனாமி வகுப்பு, இவைகளுக்கு தகுந்தாற்போல், மதுபானங்களின் ரகங்கள் மாறுபடுகிறது. ஆனால் அனைத்து வகுப்புகளிலும் பயணிக்கும் பயணிகளில் விருப்பப்படும் பயணிகள் அனைவருக்கும் மதுபானங்கள் வழங்கப்படுவதாக, ஏர் இந்தியா நிறுவனம் தெரிவிக்கிறது.

இந்த மதுபான விருந்தில் மிகவும் உயர்ரக Scotland 21 YO single malt மற்றும் இத்தாலி நாட்டு தயாரிப்பு உயர் ரகம் மதுபானங்கள், சிவப்பு ஒயின்கள், பீர் ரகங்கள் உள்ளிட்டவர்கள் வழங்கப்படுவதாக ஏர் இந்தியா விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆனால், இந்த மதுபான விருந்து அனைத்தும் வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் சர்வதேச விமானங்களில் மட்டுமே வழங்கப்படும் என்றும், உள்நாடுகளில் இயக்கப்படும் ஏர் இந்தியா பயணிகளுக்கு, மதுபானங்கள் விமானத்துக்குள் வழங்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அகமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்துக்கு பின்பு, ஏர் இந்தியா சர்வதேச விமானத்தில், பயணிகள் பயணம் செய்வது குறைந்துவிட்ட காரணத்தால் பயணிகளுக்கு கவர்ச்சிகரமான அறிவிப்புகளை செய்து தங்கள் விமானத்தில் பயணம் செய்வதற்கு பயணிகளை ஈர்ப்பதற்காக ஏர் இந்தியா விமான நிறுவனம் இது போன்ற கவர்ச்சியான அறிவிப்புகளை வெளியிடுவதாக விமான பயணிகள் தரப்பில் தெரிவித்தனர்.

ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு அடுத்தடுத்து ஷாக்

பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்கும் அமைச்சர்கள்

கோவி.செழியனை தொடந்து அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன்

சென்னை, ஜன.25: உயர்கல்வி துறை அமைச்சர் கோவி.செழியனை தொடர்ந்து ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமையில் நடந்த கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை அத்துறையின் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் புறக்கணித்து ஆளுநருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் புதிய ஆளுநராக ஆர்.என்.ரவியை ஒன்றிய அரசு நியமனம் செய்தது. அவர் பொறுப்பேற்றது முதல் தமிழகத்தின் கலாச்சாரம் - பண்பாடு, கல்வி உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை விமர்சனம் செய்வதும், கேளி செய்வதுமாக இருந்து வருகின்றார். மேலும் ஆட்சியை குறை கூறும் வகையில் பல்வேறு சர்ச்சையான பேச்சுகளை மேடைகளில் பேசி வருகிறார். இதற்கு அப்போதே தமிழக அரசும், அமைச்சர்கள், அதிகாரிகள் பதில் அளித்து வருகின்றனர்.

இதற்கிடையே உயர்கல்வி அமைச்சராக இருந்த பொன்முடி ஆளுநர் கூறும் கருத்துகளுக்கு நேரடியாக பதிலடி கொடுத்து வந்தார். மேலும், பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர் என்ற முறையில் அமைச்சர் பொன்முடி ஆளுநரின் பட்டமளிப்பு விழாக்களை தவிர்க்க தொடங்கினார். சட்டப்பேரவையில் பல்கலைக்கழக துணை வேந்தர்களை நியமனம் செய்வதில் தமிழக முதல்வருக்கு அதிகாரம் அளித்து தீர்மானம் நிறைவேற்றி சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதனை எதிர்த்து ஆளுநர் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த சர்ச்சை நீடித்து வந்த நிலையில் பல்கலைக்கழக துணை வேந்தராக இருந்தவர்கள் தங்களின் பதவி காலம் முடிந்து அந்த பதவிகளில் இருந்து விடுபட்டனர். அதற்கு பிறகு புதிய துணை வேந்தர்களை நியமிப்பதில் யாருக்கு அதிகாரம் என்ற சர்ச்சை நீடித்து வருவதால் இன்னும் அப்பதவிகள் காலியாக உள்ளன.

▶ வேப்பேரி கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகள்.

இந்நிலையில் ஒரு சில பட்டமளிப்பு விழாக்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கி வந்தார். அதேபோல், ஆளுநரும் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கி வருகிறார். அண்மையில் நடந்த சட்டப்பேரவை கூட்டத்தொடரில் தேசிய கீதம் தமிழ் தாய் வாழ்த்துக்கு முன்னதாக இசைக்கப்படவில்லை என கூறி ஆளுநர் உரையை வாசிக்காமல் பேரவையில் இருந்து வெளியேறினார். ஆளுநரின் அடாவடித்தனமும், அராஜக போக்கும் அதிகரித்த வண்ணமாக உள்ளன.

இந்நிலையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நேற்று சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவ கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமையேற்று 307 மாணவிகளுக்கும், 392 மாணவர்களுக்கும் என மொத்தம் 699 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் அசாம் மாநில கால்நடை மருத்துவ கல்லூரி துணை வேந்தர் நிரஞ்சன் கலிதா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மேலும், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அழைப்பிதழில், பல்கலைக்கழகத்தின் இணை வேந்தரும், கால்நடை பராமரிப்பு துறை அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன் பங்கேற்கிறார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவர் பட்டமளிப்பு விழாவை புறக்கணித்தார்.

ஏற்கனவே, தமிழகத்தில் மிகப்பழமை வாய்ந்த பல்கலைக்கழகமான சென்னை பல்கலைக்கழகத்தின் 167வது பட்டமளிப்பு விழா ஜன.22ம் தேதி நடந்தது. இதில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தமிழக அரசுக்கு எதிராக செயல்பட்டு வரும் ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்கும் நிகழ்ச்சிகளை, புறக்கணிப்பதாகவும் மாணவர்களுக்கு ஆளுநர் பட்டமளிக்க தகுதி அற்றவர் என கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். இந்த நிலையில் கால்நடை மருத்துவ கல்லூரியின் பட்டமளிப்பு விழாவை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் புறக்கணித்து ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

சத்துணவு ஊழியர்களுக்கு... முதல் பக்க தொடர்ச்சி

இருந்தவர்களுடைய வாட்டத்தைப் போக்குவதற்கு அனைத்துத் துறைகளிலும் சமச்சீரான வளர்ச்சியை அடைந்திருக்கின்றோம்.

பெரிய நகரங்களுக்கு மட்டும்தான் தொழிற்சாலைகளா? பாலங்களா? சாலைகளா? நூலகங்களா? கல்லூரிகளா? உள்கட்டமைப்பு வசதிகளா? என்று சலிப்புடன் கேட்டதை மாற்றி, அனைத்துப் பகுதிகளுக்கும், அனைத்து மாவட்டங்களுக்கும் அனைத்தையும் கொண்டு சென்றிருக்கின்றோம். இவை அனைத்திலும் சமூக நீதியை, சமநீதியை நிலை நாட்டியிருக்கின்றோம்.

இந்த 5 ஆண்டுகால உழைப்பையும் வளர்ச்சியையும் பார்த்து, அடுத்த 5 ஆண்டுகளுக்கும் திராவிட மாடல் ஆட்சிதான் தொடர வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்கள் முடிவு செய்துவிட்டார்கள். உறுதியாகச் சொல்கிறேன். நாங்கள்தான் மீண்டும் வருவோம்! நாங்கள்தான் மீண்டும் வருவோம்! மீண்டும் மீண்டும் வருவோம்! மீண்டும்வெல்வோம்! மீண்டும் மீண்டும் வெல்வோம்!

இவ்வாறு அவர் பேசினார்.

அதிருப்தியில் இருந்த

செங்கோட்டையனை சரிகட்ட ஆதரவாளர்கள் 42 பேருக்கு பதவி

கோபி, ஜன. 25: விஜய் மீது அதிருப்தியில் இருந்த செங்கோட்டையனை சரிகட்ட அவரது ஆதரவாளர்கள் 42 பேருக்கு தவெகவில் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதிமுகவில் இருந்த முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் ஆதரவாளர்கள் 50க்கும் மேற்பட்டோர் கட்சியில் இருந்து அடுத்தடுத்து நீக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து கே.ஏ.செங்கோட்டையன், தவெகவில் இணைந்தார்.

அவருக்கு தலைமை நிர்வாக குழு ஒருங்கிணைப்பாளர் மற்றும் கொங்கு மண்டல பொறுப்பாளர் பதவி வழங்கப்பட்டது. ஆனால் அவரது ஆதரவாளர்கள் ஒருவருக்கு கூட பதவிகள் வழங்கப்படவில்லை. மேலும் கட்சியில் போதிய அளவு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் இருந்து வந்தது.

இதனால் செங்கோட்டையன் அதிருப்தியில் இருப்பதாகவும், வேறு கட்சிக்கு மாற வாய்ப்பு உள்ளதாகவும் தகவல் வெளியானது.

இந்நிலையில் செங்கோட்டையனை சமாதானப்படுத்தும் வகையில், அவரது ஆதரவாளர்கள் 42 பேருக்கு பல்வேறு பொறுப்புகள் வழங்கப்பட்டு உள்ளது. அதில் முன்னாள் எம்.பி. சத்தியபாமாவிற்கு மண்டல மகளிர் ஒருங்கிணைப்பாளர் பதவியும், குறிஞ்சிநாதன் கோபி தொகுதி ஒருங்கிணைப்பு பொறுப்பாளர், தம்பி என்கிற சுப்பிரமணியம் நம்பியூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பு பொறுப்பாளர், ஈஸ்வரமூர்த்தி நம்பியூர் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பு பொறுப்பாளர், அருள் ராமச்சந்திரன் மேற்கு மாவட்ட மாணவர் அணி ஒருங்கிணைப்பு குழு இணை பொறுப்பாளர், வாசுதேவன் கோபி கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பு குழு பொறுப்பாளர், எஸ்.ஆர். செல்வம் சத்தியமங்கலம் விஜய் மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர், காமேஷ் சத்தியமங்கலம் நகர தகவல் தொழில் நுட்ப பிரிவு ஒருங்கிணைப்பு குழு இணை பொறுப்பாளர் என மொத்தம் 42 பேருக்கு பல்வேறு பொறுப்புகள் வழங்கப்பட்டு உள்ளது.

அதிமுகவில் இருந்து செங்கோட்டையனுடன் வந்த காரணத்திற்காக ஒரே மாவட்டத்திற்குள் 42 பேருக்கு பதவி வழங்கி இருப்பது தவெகவினரிடையே சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

எங்களுக்கு இப்போ விசில் தேவையில்லை

குக்கர் விசில் போதும்

தமிழிசை நக்கல்

சென்னை, ஜன.25: சென்னை கமலாலயத்தில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவின் முதல் கூட்டம் நடந்தது. தமிழிசை தலைமை வகித்தார். கூட்டத்தில் மாநில துணைத்தலைவர்கள் வி.பி. துரைசாமி, கே.பி.ராமலிங்கம், கனகசபாபதி, மாநில செயற்குழு உறுப்பினர் கே.எஸ். ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து, தமிழிசை நிருபர்களிடம் கூறியதாவது:

எங்களது தேர்தல் அறிக்கை எல்லாப் பிரிவினரும் வளர்ச்சி அடையக்கூடிய தேர்தல் அறிக்கையாக இருக்கும். இதுவரை எந்த அரசியல் கட்சியும் கொடுக்காத தேர்தல் அறிக்கையாக இருக்கும். மிக நம்பிக்கையோடு 2026ல் தேசிய ஜனநாயக கூட்டணிதான் வெற்றி பெறும் என்று பிரதமர் மோடி சொல்லிவிட்டுச் சென்று இருக்கிறார். அதனால், வெற்றி பெறும் கூட்டணிக்கு சிபாரிசு செய்யக்கூடிய தேர்தல் அறிக்கையாக இது இருக்கும்.

சிபிஐ விசாரணைக்கு விஜய்யை அழைப்பது சட்டரீதியான நடவடிக்கை. அவரை அங்க வர வைப்பது, இங்க வர வைப்பதற்காக அல்ல. அரசியல் ரீதியாக என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். விசில் எங்களுக்கு இப்போது உடனே தேவையில்லை. எங்களிடமே விசில் இருக்கிறது, குக்கர் விசில் எங்களிடம் இருக்கிறது. இதற்கு மேலும் கட்சிகள் தேஜ கூட்டணிக்கு வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 006
தொலைபேசி எண் 0431-2432246 மின்னஞ்சல்: srirangamtemple@gmail.com
திருக்கோயில் இணையதள முகவரி: https://srirangamranganathar.hrce.tn.gov.in
ந.க. எண் 1936/1435/C6 இ-டெண்டர் அறிவிப்பு தேதி : 24.01.2026

வ. எண்	ஒப்பந்தப்புள்ளி விவரம்	இ-டெபாசிட் தொகை ரூ.
1.	ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான பஞ்சக்கரை சாலையில் உள்ள பக்தர்கள் தங்கும் விடுதி அனைத்து இடங்களிலும் வெளிமுகமை மூலம் 60 ஆட்களை கொண்டு மூன்று ஆண்டுகளுக்கு தூய்மைப்பணி மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுதல்	ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்)

- முன்கூட்டம் நடைபெறும் நாள் : 30.01.2026 - மாலை 04.00 மணி.
- www.tntenders.gov.in வலைதளத்தில் தொழிற்நுட்ப மற்றும் விலை ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி : 26.02.2026 - மதியம் 1.00 மணி.
- தொழிற்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறப்பு : 26.02.2026 - பிற்பகல் 03.00 மணி.
- தொழிற்நுட்ப ஒப்பந்தப்புள்ளி தகுதியான டெண்டர்கள் அறிவிப்பு : தொழிற்நுட்ப ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்கு பின். விலை ஒப்பந்தப்புள்ளி திறப்பு மற்றும், பேச்சுவார்த்தை : தகுதியான ஒப்பந்தப்புள்ளிதாரர்களை அறிவித்த பிறகு.
- இ-டெண்டர் நிபந்தனைகள் https://srirangamranganathar.hrce.tn.gov.in மற்றும் www.tntenders.gov.in என்ற வலைதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தகவல்களுக்கு- தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள் tntenders அலுவலக எண் 0120-4001002, 0120-4001005, 0120-4493395 மற்றும் மின்னஞ்சல் முகவரி : support.etender@nic.in
- திருக்கோயிலை தொடர்புகொள்ள வேண்டிய எண் : 0431-2432246

சு.ஞானசேகரன் தக்கார் / இணை ஆணையர் — செ.ம.தொ.இ./ 434 /ஒப்பந்தப்புள்ளி/2026 — செ.சிவராம்குமார் இணை ஆணையர் / செயல் அலுவலர்

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள்2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
கிளை அலுவலகம்: எண்.1780-A, சக்கரவர்த்தி டவர், திருச்சி ரோடு, ஒலிம்பஸ், ராமசாமி நகர், ராமநாதபுரம், கோயம்புத்தூர்- 641045					
1.	118621018000006 / 1. Mr.சின்னப்பன் 2.Mrs.பெர்னாத்ஜெகா	(I) 13.07.2021 (ii) 12.07.2021 அன்றுள்ளபடி ₹ 14,44,715/- (ரூபாய் பதினான்கு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எழுநூற்று பதினைந்து மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 09.12.2021 & நேரடி சுவாதீனம் - 11.12.2025	19.01.2026 அன்றுள்ளபடி ₹ 33,26,435.48 (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து இருபத்து ஆறாயிரத்து நானூற்று முப்பத்து ஐந்து மற்றும் பைசா நாற்பத்து எட்டு மட்டும்)	₹ 16,75,700/- (ரூபாய் பதினாறு லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து எழுநூறு மட்டும்)	₹ 1,67,570/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து ஏழாயிரத்து ஐநூற்று எழுபது மட்டும்)

சொத்து விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் ஜாயிண்ட் I சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட S.F.எண்.4/1 பகுதி, புதிய S.F.எண்.789/6, மனைவாரி பட்டா எண்.397, பிள்ளையார்பாளையம், குறிச்சி கிராமம், கோயம்புத்தூர் தாலுகா என்னும் முகவரியில் வடக்கு தெற்காக மேற்கில் 12.8 மீட்டர், வடக்கு தெற்காக கிழக்கில் 12.7 மீட்டர், கிழக்கு மேற்காக தெற்கில் 9.1 மீட்டர், கிழக்கு மேற்காக வடக்கில் 9.1 மீட்டர். ஆக மொத்தம் 116 சதுர மீட்டர் அல்லது 1248.6 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அனைத்து இதர அனுபந்தங்கள் மற்றும் வழிப்பாதை மற்றும் அனுபந்த உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: பழனியம்மாள் வீடு, S.F.எண்.789/5, மேற்கு: தாயம்மாள் வீடு, வடக்கு: கிழக்கு மேற்கு வழிப்பாதை.
மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது Mr.சின்னப்பன்-க்கு சொந்தமானது (உங்களில் எண்.1-ல் உள்ள நபர்).

கிளை அலுவலகம்: SF எண்.117, கதவு எண். 168 3/2, UPKN காம்ப்ளெக்ஸ், பழனி ரோடு, உடுமலைபேட்டை, திருப்பூர் மாவட்டம்-642126					
2.	1189210170000015 / 1. Mr.தங்கராஜ் P 2. Mrs.சசிகலா S	(I) 09.01.2025 (ii) 01.01.2025 அன்றுள்ளபடி ₹ 5,62,677/- (ரூபாய் ஐந்து லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து அறுநூற்று எழுபத்து ஏழு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 23.04.2025 & நேரடி சுவாதீனம் - 08.11.2025	17.01.2026 அன்றுள்ளபடி ₹ 7,81,290.67 (ரூபாய் ஏழு லட்சத்து எண்பத்து ஒன்றாயிரத்து இருநூற்று தொண்ணூறு மற்றும் பைசா அறுபத்து ஏழு மட்டும்)	₹ 14,85,600/- (ரூபாய் பதினான்கு லட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து அறுநூறு மட்டும்)	₹ 1,48,560/- (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்)

சொத்து விவரம்: திருப்பூர் பதிவு மாவட்டம் மற்றும் உடுமலைபேட்டை சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட SF எண்.276/A1, ஆண்டிகவுண்டனூர் கிராமம், உடுமலைபேட்டை தாலுகா என்னும் முகவரியில் 1990.6 சதுர அடி காலி மனை, அதனுடன் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், அதனுடன் பொது லே-அவுட் உபயோகிக்கும் உரிமை மற்றும் அனுமந்த உரிமைகள். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கில் 14.8 மீட்டர், கிழக்கு மேற்காக தெற்கில் 17.0 மீட்டர், வடக்கு தெற்காக கிழக்கில் 8.2 மீட்டர், வடக்கு தெற்காக மேற்கில் 17.4 மீட்டர். எல்லைகள்: மாறன்-க்கு சொந்தமான சொத்திற்கு வடக்கு, கிழக்கு மேற்கு கால்வாய்க்கு தெற்கு, மற்ற சொத்திற்கு கிழக்கு, தெற்கு வடக்கு தெருவிற்கு மேற்கு.
சொத்தானது Mr.தங்கராஜ்-க்கு சொந்தமானது (உங்களில் 1-ல் உள்ள நபர்).

கிளை அலுவலகம்: SF எ